56

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

மட்டம் - 05

**SNE5546/ESE5246 – உள்ளடங்கல் வகுப்பறையில் சிறார்களுக்கான சிறப்பான கல்விச் சூழலை உருவாக்குதல்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 02.02.2025 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. உள்ளடங்கல் வகுப்பறை அமைப்பில் "பல்வகைமை" (Diversity) என்பதன் பொருளை விளக்குக.
2. "கலைத்திட்ட வேறுபடுத்தல்" (Curriculum Differentiation) என்ற பதத்தை விவரிக்குக.
3. உள்ளடங்கல் வகுப்பறையில் மாணவர்களை ஒழுக்கபடுத்தும் ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய ஐந்து (05) நற்குணங்களைக் குறிப்பிடுக.
4. மாணவர்களின் ஆர்வங்களின் அடிப்படையில் உள்ளடங்கல் வகுப்பறை அமைப்பில் பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) உத்திகளைச் சுருக்கமாக விவரிக்குக.
5. "திட்டமிடற் கூம்பு" (Planning Pyramid) என்ற எண்ணக்கருவை ஒரு (01) எடுத்துக்காட்டுடன் விளக்குக.
6. கல்வியின் பல்வேறு உள்ளடங்கல் மாதிரிகளைச் சுருக்கமாக விளக்குக.
7. சமூக மற்றும் மனவெழுச்சி சார் பிரச்சினைகள் உள்ள மாணவர்களின் ஐந்து (05) பண்புகளைக் குறிப்பிடுக.
8. இலங்கைச் சூழலில் அரச பாடசாலைகளில் உள்ளடங்கல் அமைப்பை செயற்படுத்துவதில் உள்ள சவால்கள் யாவை?

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. i. மாணவர்களின் பல்வேறு கற்றற் பாணிகளை எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குக.
(05 புள்ளிகள்)

ii. ஒரு ஆசிரியராக, உள்ளடங்கல் வகுப்பறையில் மாணவர்களின் தயார்நிலையை நீங்கள் எவ்வாறு கையாள்கிறீர்கள்? எடுத்துக்காட்டுக்களை முன்வைக்குக.
(07 புள்ளிகள்)

iii. இலங்கையில் உள்ள பாடசாலைகளின் சூழலில் பயனுள்ள உள்ளடங்கற் சூழலை உருவாக்குவதற்கான படிகளை விவரிக்குக.
(08 புள்ளிகள்)

10. i. ஹொவர்ட் கார்ட்னரின் பல் நுண்மதிக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுக்களுடன் சுருக்கமாக விளக்குக.
(05 புள்ளிகள்)

ii. பல்வெறு திறன்களைக் கொண்ட சிறுவர்களை உள்ளடக்கிய வகையில், உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியர் ஹொவர்ட் கார்ட்னரின் பல் நுண்ணறிவு கோட்பாட்டை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி விளக்குக.
(07 புள்ளிகள்)



///

**iii.** உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியராக, உள்ளடங்கல் தொடர்பாக சமூகத்திலிருந்து எதிர்மறையான அணுகுமுறைகளை நீங்கள் எவ்வாறு கையாளலாம் என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விவரிக்குக.

**(08 புள்ளிகள்)**

**11. i.** உடல் ரீதியான தண்டனையின் **ஐந்து (05)** விளைவுகளைக் குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

**ii.** உள்ளடங்கல் வகுப்பறையில் மாணவர்களை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியரின் பங்கை விவரிக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கல் வகுப்பறை அமைப்புக்களில் விதிகளை மீறும் மாணவர்களுக்கு மிருதுவான ஒழுக்கப்படுத்தல் (Mild Disciplinary) முறைகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை எடுத்தக்காட்டுக்களுடன் பகுப்பாய்வு செய்க.

**(08 புள்ளிகள்)**

**12. i.** கலைத்திட்ட வேறுபடுத்தலைப் பாதிக்கும் காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** "உள்ளடங்கல் வகுப்பறைகளில் இயலாமைகள் உள்ள மாணவர்களின் கற்றற் பாணிகளை அடையாளம் காண்பது ஆசிரியர்களுக்கு அவர்களுக்கான செயற்பாடுகளைத் திட்டமிடும்போதும் ஒழுங்கமைக்கும்போதும் முக்கியமானதாகும்" இக்கூற்றை நியாயப்படுத்துக.

**(07 புள்ளிகள்)**

**iii.** ஒரு உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியராக, உதவித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விசேட கல்வித் தேவைகள் உள்ள பிள்ளைகளின் தயார்நிலையை எவ்வாறு மேம்படுத்த முடியும் என்பதை பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் விவரிக்குக.

**(08 புள்ளிகள்)**

**13. i.** உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியர்கள் தங்களிடையே விருத்தியாக்கிக் கொள்ள வேண்டிய திறன்களைச் சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** உள்ளடங்கல் வகுப்பறைகளில் நேர்மறையான மனவெழுச்சி சார் சூழலை நீங்கள் எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதை விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியராக, தொடர்ச்சியான ஆசிரியர் பயிற்சியானது கற்பித்தல் மற்றும் கற்றல் செயன்முறைக்கு எவ்வாறு பயனளிக்கும் என்பதை விவரிக்குக.

**(08 புள்ளிகள்)**

**14. i.** உள்ளடங்கல் வகுப்பறையில் மாணவர்களை ஊக்கப்படுத்த மார்ஸ்லோவின் தேவைகளின் படிநிலைக் கோட்பாட்டை (Marslow"s Hierarchy of Needs Theory) ஆசிரியர்கள் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** விசேட கல்வித் தேவைகள் உள்ள சிறுவர்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதில் பெற்றோர் மற்றும் சமூக ஈடுபாட்டின் நன்மைகள் யாவை?

**(07 புள்ளிகள்)**

**iii.** வகுப்பறை முகாமைத்துவச் செயற்பாட்டில் ஆசிரியர்கள் எவ்வாறு இணை கற்பித்தல் (Co – Teaching) முறைகளைப் பயன்படுத்தலாம் என்பதை விவரிக்குக.

**(08 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*



112